மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புறநகர் வழித்தடங்களில் பேருந்து பணிகளை இயக்கியதன் மூலம் 1970-71-ஆம் ஆண்டில் வசூலான மொத்தத் தொகை ரூபாய் 67,57,975 ஆகும்.

திரு. என். கிட்டப்பா : இந்தத் தொகை அதற்கு முந்திய ஆண்டை விட குறைவானதா, அதிகமானதா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் இல்லை.

Nagercoil–Trivandrum buses

* 115 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the total number of buses operated by the Tamil Nadu Government between Nagercoil and Trivandrum; and

(*b*) whether night services are to be introduced in this route?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, நாகர்கோயில்—திருவனந்தபுரம் வழித்தடத்தில் 13 பேருந்துப் பணிகளை நடத்தி வருகிறது. நாகர்கோவில்—திருவனந்தபுரம் வழித்தடத்தை இணைக்கும் கன்னியாகுமரி—திருவனந்தபுரம் வழியே செல்லும் ஒரு பேருந்துப் பணி இதில் அடங்காது.

(இ) இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசு மருத்துவர்களின் குடியிருப்புகள்

* 91. *வினா.*—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டாக்டர்கள் தாங்கள் பணிபுரியும் அரசாங்க மனைகளிலிருந்து குறிப்பிட்ட தூரத்திற்குள் தங்கள் குடியிருப்புகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற விதி ஏதேனும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ்நாடு மருத்துவ நடைமுறைச் சட்டத்தின்படி, அரசினர் மருத்துவ மனைகளிலுள்ள மருத்துவ அதிகாரிகள் தங்களுக்கு அரசாங்கக் குடியிருப்பு இல்லங்கள் அளிக்கப்படாவிட்டால், தங்கள் வசதிப்படி நோயாளிகளுக்கு பகலிலோ, இரவிலோ மருத்துவ உதவி அளிக்கத் தயாராக மருத்துவ மனைகளுக்கு அருகிலேயே குடியிருக்க வேண்டும்.

1972 ஆகஸ்ட் 12]

திரு. என். கிட்டப்பா : சில குறிப்பிட்ட இடங்களில் டாக்டர்கள் மருத்துவ மனைக்கு நீண்ட தூரத்திற்கு அப்பால் குடியிருந்து வருவதால் மருத்துவ மனையில் அவசரமாக கவனிக்கப்பட வேண்டிய கேஸ்கள் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது. ஆகவே மருத்துவ மனைக்கு அருகிலேயே குடியிருக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கூடுமான வரையில் மருத்துவ மனைக்கு அண்மையிலேயே டாக்டர்கள் குடியிருக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் மருத்துவ மனைக்கு அருகாமையில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினுல் அவர்கள் தூரத்தில் இருக்கிருர்கள். மருத்துவ மனைக்கு அருகிலேயே டாக்டர்களுக்கு வீடுகள் அரசாங்கத்தில் கட்டித்தர வேண்டும் என்கிற கொள்கை இருக்கிறது. சென்ற ஆண்டு ஏற்பட்ட யுத்த நெருக்கடி காரணமாக நிதிவசதிக் குறைவினுல் அந்தக் கொள்கையை பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. நிதிவசதி பெருகப் பெருக வீடுகள் கட்டப்படும்—மருத்துவ மனைகளும், டாக்டர்களும் நெருங்கி வரும்படிச் செய்ய முடியும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

Television Unit for Medical College in City.

* 92 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to set up Closed Circuit Television set in the City Medical College to improve training and educational methods; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை அரசு பொது மருத்துவ மனையில் குறிப்பிட்ட ஒரு தொலைவிற்குள் செயல்படக்கூடிய தொலைக் காட்சிப் படப் பிரிவு (closed circuit Television Unit) ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டு, மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு ஒன்று அரசுக்கு வந்துள்ளது. இது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1972-73-ம் ஆண்டு நிறைவேற்றப்படும். இந்தத் தொலைக் காட்சிப் படப்பிரிவை அமைப்பதன் மூலம், அறுவை சிகிச்சைக் கூடத்தில் செய்யப்படும் அறுவை சிகிச்சையின் தொழில் நுட்ப உத்திகள், விவரங்கள் முழுவதையும் தொலைக்காட்சிப் படத்திரையில் தெளிவாகக் காண முடியும். அறுவை சிகிச்சைக் கூடத்திலிருந்து தொலைவில் உள்ள விரிவுரை நடைபெறும் அறையில் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் கூறும் விளக்கங்களைத் தெளிவாகக் கேட்க இயலும்.